# <u>ஆன்மீக விடுதலையே மெய் வாழ்வு!</u>

தோழர்களே, ஆன்மீக வாழ்வின் வெற்றி என்பது கடவுளை அறிந்து இன்புற்று வாழுவது, ஆனால் மனிதனால் அந்த கடவுளை அறிந்து இனபுற முடியவில்லை, அவன் பாவத்தின் பிடியிலிருக்கிறான், அவன் பாவியாக இருக்கிறான் பரிசுத்த கடவுளை அறிய முடியவில்லை. சில நேரங்களில் பாவி என்கிற வார்த்தையை கேட்டு உள்ளம் கொதிக்கும் மக்கள் உண்டு, அவர்கள் கேட்கும் கேள்வி யார் பாவி? இந்த கேள்வியோடே அவர்களுடைய சிந்தனை நின்றுவிடுகிறது. இந்த கேள்வியை நாம் சிந்திப்போமானால் அதில் கடவுளை அடையும் வழி உண்டு என்று அறியலாம். இந்த கேள்விக்கான பதிலை தூய வேதம் மாத்திரமே நமக்கு பதில் அளிக்கிறது. எத்தனையோ புத்தகம் இருக்க, ஒரு மனிதனை மாற்றக்கூடிய புத்தகம் வேத புத்தகமே, ஆம் இது உண்மை தான். இது கடவுளுடைய வார்த்தையாகவே இருக்கிறது. இது ஒரு மனிதனுடைய ஆத்தும இரட்ச்சிப்புக்கு காரணமாய் இருக்கிறது. ரோமர் 10:17.

இந்த தூய வேதபுத்தகம் மாத்திரமே கடவுளின் பரிசுத்தம், உலக படைப்பு, மரணம், மனிதனுடைய சீர்கேடான நிலை, கடவுள் எப்படி மனிதனை இந்த சீர்கேடான நிலையிலிருந்து காப்பாற்றுகிறார் என்பதை எடுத்து கூறுகிறது. 11போதுரு 1:21 கர்த்தருடைய வார்த்தையானது ஒரு காலத்திலும் மனிதனுடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை, தேவனுடைய பரிசுத்த மனிதர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவ்ப்பட்டு அருளப்பட்டது. எந்த மனிதன் கடவுளை நேசித்தானோ அந்த மனிதன் வேதத்தை நேசித்தவனாக இருந்தான், எந்த மனிதன் கடவுளை வெறுக்கிறவனாக இருந்தானோ அந்த மனிதன் வேதத்தை வெறுக்கிறவனாக இருக்கிறான். ஆக, இந்த தூய வேதபுத்தகம் வேறு எந்த தத்துவங்களும், இதிகாசநூல்களும் சொல்லாததை தூய வேதபுத்தகமே நமக்கு தெளிவான விளக்கத்தை கொடுத்துக்கொண்டு இருக்கிறது. இந்த வேத புத்தகத்திலிருந்து இதற்கான விடை காண முயல்வோம்

<u>மனித படைப்பும் பாவமும்</u> :

மனிதன் கடவுளின் சாயலாக படைக்கப்ட்டான். சாயலாக படைக்கப்டான் என்று சொல்லும் போது சரீர சாயல் அல்ல ஏனென்றால் கடவுள் ஆவியாக இருக்கிறார் என்று வேதம் சொல்லித்தருக்கிறது. அவருக்கு உருவம் கிடையாது. சாயலாக என்று சொல்லும் போது, 1. மனிதன் கடவுளை அறிந்து இன்புற்று வாழும் இயல்பு 2. மனிதன் பாவமற்ற பரிசுத்த நிலையில் படைக்கப்பட்டான் 3. மனிதன் கடவுளின் சித்தம் செய்து அவரை மகிமைப்படுத்த. இந்த எல்லா சிலாக்கியங்களையும் பாவத்தின் விளைவால் உடைந்து போனது. ஆதாம் ஏவாள் மூலம் இந்த உலகத்தில் எப்படி வந்தது என்றும் அதனால் மனிதனுக்கு வந்த சாபங்களையும் நாம் ஆதியாகமம் 3 ஆம் அதிகாரத்தில் காண்கிறோம். இந்த பாவத்தினால் மனிதன் கடவுளோடு உள்ள உறவில் இருந்து பிறிவு (மரணம்)உண்டானது அவனால் மெய் கடவுளை அறியமுடியாத நிலை, அது மாத்திரம் அல்ல அவன்

தன்டனைக்குரியவனாக மாறிப்போனான். இந்த உண்மை பல மனிதர்களால் ஒரு புராணக்கதை அல்லது கட்டுக்கதையாக பார்க்கப்படுகிறது. இதைதான ஆவிக்குரிய குருட்டு நிலை என்று வேதம் சொல்லுகிறது. இந்த உலகத்தில் பாவம் தானாக உண்டாகவிலை அல்லது கடவுளால் உண்டாக்கப்படவில்லை, கடவுள் பரிசுத்தராக இருக்கிறார் அவரிடத்தில் பாவம் இல்லை, எந்த வகையிலும் பாவத்தை அறியாதவராக இருக்கிறார். அவர் ஒளியாக இருக்கிறார் அவரிடத்தில் எவ்வளவேனும் இருளில்லை இந்த பாவத்திற்கு முழுக்க முழுக்க முழு மனுகுலத்தின் பிரதிநிதியாகிய ஆதாமின் கீழ்படியாமையே கரணம். ஒரு மனிதனால் முழு மனுகுலத்திற்கு பாவமும் பாவத்தின் சாபமாகிய மரணமும் வந்தது. மரணம், சரீரமரணம் அதன் பின் நித்திய மரணம் ரோமர் - 5:12.

**பாவம் என்றால் என்ன?**

இந்த கேள்விக்கான பதிலை அநேகர் பாதியாகவே புரிந்து வைத்து இருக்கிறார்கள், கோபம், குடிப்பது, கெட்டவார்த்தை பேசுவது, விபச்சாரம் செய்வது என்று கருதுகிறோம். இவைகளெல்லாம் பாவம் தான் ஆனால் இவை பாதி பதில்களே, வேதம் என்ன சொல்லுகிறது என்பதை பார்போம். (1) 1யோவான் 3:4 – <u>பாவஞ்செய்கிற எவனும் நியாயப்பிரமாணத்தை மீறுகிறான் நியாயப்பிரமாணத்தை மீறுகிறதே பாவம்</u>. மக்களுக்கு தம்முடை பரிசுத்ததை வெளிப்படுத்துவதற்காக கடவுள் கொடுத்த நீதி சட்டங்கள் இந்த நியாயப்பிரமாணம் கடவுளுடைய நீதியையும் பரிசுத்ததையும் வெளிப்படுத்துவதன்றி சுவிசேத்திற்கான வாசலையும் அதை புரிந்து கொல்லவும் உதவுகிறது. இன்னும் சரியான கண்னோட்டத்தில் பார்க்கபோனால் இந்த நியாப்பிரமாணங்களை கைகொள்வதினால் மனிதனுக்கு இரட்ச்சிப்பு வருவதில்லை, இந்த நியாயப்பிரமானத்தை மழுமையாக கைகொள்ளவும் மனிதனால் முடியாது. மாறாக இந்த நியாயப்பிரமாணத்தின் மூலம் அவருடைய பரிசத்ததை உணர்ந்து மனிதன் தன்னுடைய பாவத்தையும், மீறுதலையும் அறிந்து மனந்திரும்பவே ஆகும். இயேசு கிறிஸ்து வாழ்ந்த காலத்தில் மத குருமார்கள் (பரிசேயர்/சதுசேயர்) இந்த நியாயப்பிரமாணங்களுக்கு புது புது அர்த்தங்களை கொடுத்தும், மேலும் மனித கட்டளைகளையும் கூட்டியும் மக்களை அடிமைப்படுத்தினர். தாங்களும் அதற்கு கீழ்ப்படியாமலும் இருந்தனர். அதுபோலவே இன்றைக்கும் அநேக குருமார்கள் இருப்பதை பார்க்க முடிகிறது. கடவுளை மனிதன் அடைவதற்கு பரிகாங்கள் செய்யவேண்டும், கிறிஸ்துவத்திலும் சில குருமார்கள் வெள்ளை துணி அணிய வேண்டும், பூவைக்க கூடாது. நகை அனிய கூடாது என்று புது புது சட்டங்களைப் போட்டு பாவத்திற்கு புதிய விளக்கங்களை கொடுக்கிறார்கள். ஏன் நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டது என்று ரோமர் 3:19ல் வாசிக்கிறோம். (2) அதாவது வாய்கல் யாவும் அடைக்கப்படும் படிக்கும், உலகத்தார் யாவரும் தேவனுடைய ஆக்கினைத்தீர்ப்புக்கு ஏது வானவர்களாகும் படிக்கு இந்த நியாயப்பிரமாணம் கொடுக்கப்ட்டது. (3) ரோமர் : 3:20 – பாவத்தை அறிகிற அறிவு நியாயப்பிரமாணத்தினால் உண்டாயிறுக்கிறது. (4) ரோமர் 7:20 – எனக்குல் பாவ பிரமாணம்

இருக்கிறது என்பதை இந்த நியாயப்பிரமாணம் சொல்லுகிறது. (5) ரோமர் 7:15 – நான் மீறுகிறவன் என்பதை நியாயப்பிரமாணம் உறுதிப்படுத்துகிறது. (6) ரோமர் 8 ல் பாவத்தினால் தண்டிப்பட்ட குற்றவாளிக்கு பாவ பரிகாரியாகிய இயேசகிறிஸ்து தேவை என்பதை நியாயப்பிரமாணம் சுட்டிகாகட்டுகிறது.

மேற்கண்ட குறிப்புகளை மனதில் கொண்டு பாவி யார்? என்கிற கேள்விக்கான பதில் காண முனைவோம். தனது நற்செயல்களால் ஒருவன் நல்லவன் என்கிற பெயரை சமுதாயத்தில் பெற்றிருக்கிறான் ஆனால் அவன் கடவுடைள நம்பாதவன் என்று வைத்துக்கொல்வோம் அவன் இவ்வுலகிலும் மரணத்திற்கு பின்னும் கடவுளை சேரமுடியாது. அவன் பாவியாகவே இருக்கிறான் ஏன்? நியாயப்பிரமாணத்தின் அடிப்படியில் அவன் கடவுளின் பரிசுத்ததையும் அதிகாரத்தையும் கேள்விகேட்பதினாலும், கிறிஸ்து தேவை இல்லை என்று சொல்லாமல் சொல்வதினாலும் பாவியாக தீர்க்கப்படுகிறான். நியாயப்பிரமாணத்தை மீறுவதே பாவம். ஆக இந்த உலகத்தில் பிறக்கும் ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய இயல்பிலும் நியாயப்பிரமாணத்தின் அடிப்படியிலும் அவன் பாவியாகவே இருக்கிறான் என்று பரிசுத்த வேதம் சொல்லுகிறது. இந்த பாவத்திலிருந்து விடுதலை பெறுவது எப்படி?

<u>**பாவத்திற்கான பரிகாரம் :**</u> இந்த உலகத்தில் பிறந்த ஒவ்வொரு மனிதனும் பாவியாகவே இருக்கிறான், நல்லவன் ஒருவனுமில்லை, பாவியாக இருக்கிறான் (ரோமர் 3:10-12) என்று சொல்லும் போது 1. கடவுளை அறியாத நிலை இன்னொரு வார்த்தையில் ஆவிக்குரிய மரணம் (பிரிவு) அடைந்த நிலை 2. பரிசுத்தமாக படைக்கப்ட்டவன் பாவியாக மாறிப்போனான் 3. கடவுளோடு தோழமையோட இருந்தவன், கோபாக்கினையின் பிள்ளையாக மரணத்திற்கு பாத்திரவானாக, தண்டனைக்குரிய நிலையில் கடவுளுக்கு எதிரியாக இருக்கிறான் இந்த பாவ நிலையில் இருக்கும் மனிதன் தன்னுடைய புண்ணிய கிரியையினால், பக்தி செயல்களைால் கடவுளிடத்தில் மறுபடியும் தான் பெற்றிருந்த நிலையை பெற முடியாது. ஏன்? அவன் மாம்சமாக இருக்கிறான், ஆவியில் மரித்தவனாக இருக்கிறான், பாவத்தின் சம்பளமாகிய மரணத்திற்கு கீழ் இருக்கிறான். ஆவியாய்யிருக்கிற கடவுடைள அறியவோ அனுபவிக்கவோ, இன்புறவோ முடியயாத நிலையில் இருக்கிறான் இதை சறி செய்ய மனிதனால் முடியாது. கடவுள் மட்டுமே அதை சறி செய்ய முடியும் என்று வேதம் சொல்லுகிறது.

“தேவன் அன்பாகவே இருக்கிறார்” இப்படி அன்புள்ள கடவுள் தம்முடைய ஒரே பேரான குமாரனை இயேசு கிறிஸ்துவை இந்த உலகத்துக்கு தந்து நம்முடைய பாவங்களுக்காக அவரை தண்டித்தார், நம்முடைய பாவங்களுக்காக அவரை சிலுவையில் தண்டித்தார் நம்முடையா பாவங்களுக்காக இயேசு கிறிஸ்து தண்டனையையேற்று நமது பாவத்தை சுமந்து தீர்த்து பாவத்தின் சம்பளமாகிய மரணத்தை தம்முடைய மரணத்தினால் வென்று மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார். இப்படி நம்முடைய பாவம் தண்டிக்கபட்டபடியால் எதிரியாக இருக்கும் நாம் நீதிமானாக மாற்றப்படுகிறோம். அது மாத்திரம் அல்ல அவன் பரிசுத்த ஆவியினால் மறுபிறப்பு அடைகிறான் யோவான் 3:5 ஒருவன் ஜலத்தினாலும்

ஆவியினாலும் பிறாவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான். இவையெல்லாம் அவருடைய கிருபை. மனிதனால் இவைகளில் ஒரு சிறு துளியாகிலும் மீட்பு செய்து பெற முடியாது. இப்படி ஆவியில் பிறந்தவன் பாவத்திலிருந்து விடுதலை பெற்றவனாக, அதை ஜெயிக்க கூடியவனாக இருக்கிறான், ஒரு புதிய உறவுக்குள்ளாக கிறுஸ்துவின் மூலமாக குமாரன் என்கிற அந்தஸ்தையும் அவன் பெறுகிறான் யோவான் 1:12. ஆதுமாத்திரமல்ல ரோமர் 6:14 ன்படி நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்கட்டிராமல் கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறான். கலாத்தியர் 5:18 ஆவியினால் நடத்தப்படுவீர்களானால் நீய்கள் நியாயப்பிரமாணத்திற்கு கீழ்ப்பட்டவர்களல்ல என்று வாசிக்கிறோம் சபிக்கப்பட்ட நிலையில் இருந்த என்னை கிறிஸ்துவின் மூலம் நீதிமானாக்கி, பரிசத்தவானாகவும் தேவ கிருகை மாற்றுகிறது.

இதை வாசிக்கும் தோழரே, இந்த கடவுளுடைய கிருபையை நான் எப்படி பெறமுடியும் எனறு நீங்கள் கேட்பீர்களாகில், உங்களுக்கு ஒரே பதில் - நீங்கள் இதற்காக எதுவுமே செய்ய முடியாது, அவரிடத்தில் மண்டியிட்டு பாவத்திற்காக வருந்தி கிறிஸ்துவே உங்கள் பாவத்திற்கான விமோட்சனம் என்பதை விசுவாசிக்பதைவிட, உன்னுடைய சீர்கேடான நிலையை உணர்ந்து கிறிஸ்துவே வழி சத்தியம் ஜீவன் என்று அறிக்கை செய்வதை விட, வேறு எதுவும் உங்களால் செய்ய முடியாது.

யோவான் 1:12 - இயேசுகிறிஸ்துவின் நாமத்தின்மேல் விசவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனைப்பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி அவர்களுக்கு அதிகாரம் கொடுத்திருக்கிறார்.

யோவான் 3:18 இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறவன் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படான்.